F.Y.
July 2017

Reg. No. ......................................

Name ..........................................

808

# First Year Higher Secondary Improvement Examination

## Part - II

## TAMIL

Maximum : 80 Scores

Time : **2½** Hours

Cool off time : **15** Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool off time' of 15 minutes in addition to the writing time of 2½ hrs.
- You are neither allowed to write your answers nor to discuss anything with others during the 'cool off time'.
- Use the 'cool off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- All questions are compulsory and only internal choice is allowed.
- When you select a question, all the sub questions must be answered from the same question itself.
- Electronic devices except nonprogrammable calculators are not allowed in the Examination Hall.

**பொதுவழிமுறைகள் :-**

- விடை எழுத தந்துள்ள 2½ மணிகளுக்கு மேலாக தொடக்கத்தில் 15 நிமிடங்கள் ஓய்வு நேரமாக (cool off time) தரப்பட்டுள்ளது. இந்நேரத்தில் விடை எழுதவோ விவாதிக்கவோ கூடாது.
- இந்நேரத்தில் வினாக்களைப் படித்துப்புரிந்து கொள்ளவும் விடையை திட்டமிடவும் பயன்படுத்த வேண்டும்.
- விடை எழுதும் முன்பு வினாக்களை கவனமாக படிக்கவும்
- எல்லா வினாக்களுக்கும் விடை எழுத வேண்டும்.
- சில வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி விடை எழுதுக.
- வினாக்களை தேர்வு செய்வு செய்யும்போது, உட்பிரிவின் வினாக்களின் விடைகளை அதன் கீழ் தரவேண்டும்

**I.** 1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக. **10 × 1 = 10**

**1.** “நீர்வழிப்படூஉம் புனைபோல் ஆருயிர்
முறைவழிப்படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தனம் ஆகலின்” எனக்கூறும் நூல் எது?

அ) புறநானூறு ஆ) நற்றினை

இ) கலித்தொகை ஈ) அகநானூறு

**2.** “தொடுத்த பாசத்துத் தொல்பதி நகரைப் புடைத்துணும் பூதம்” எது?

அ) நாளங்காடி பூதம் ஆ) சதுக்க பூதம்

இ) இரணிய பூதம் ஈ) அல்லாங்காடி பூதம்

**3.** “பற்றா மாக்க டம்முட னாயினும் செற்றமுங் கலாமுஞ் செய்யா தகலுமின்” எனக் கூறுவது

அ) சிலப்பதிகாரம் ஆ) வளையாபதி

இ) மணிமேகலை ஈ) குண்டலகேசி

**4.** “கலையென்றால் உணர்ச்சிகளைக் கவரவேண்டும் களிப்பூட்டி அறிவினைப் போய் கவ்வவேண்டும்” எனக் கூறியவர்

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்

இ) கண்ணதாசன் ஈ) இராமலிங்கம்

**5.** தமிழ் நாடகத் தந்தை என போற்றப்பட்டவர் யார்?

அ) சுந்தரம் பிள்ளை ஆ) சங்கரதாஸ் சுவாமிகள்

இ) சூரியநாராயண சாஸ்திரி ஈ) பம்மல் சம்பந்த முதலியார்

**6.** “பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும்” எனப் பாடியவர் யார்?

அ) திருநாவுக்கரசர் ஆ) ஔவையார்

இ) மாணிக்கவாசகர் ஈ) காரைக்கால் அம்மையார்

**7.** “முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்
வார் இருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன்” எனக் கூறுவது

அ) குறுந்தொகை ஆ) பட்டினப்பாலை

இ) நற்றினை ஈ) நெடுநல்வாடை

**8.** “பரமார்த்த குருகதை” என்னும் நகைச்சுவை இலக்கியத்தின் ஆசிரியர்

அ) திருவள்ளுவர் ஆ) சாத்தனார்

இ) வீரமாமுனிவர் ஈ) இளங்கோவடிகள்

**9.** கருத்தைக் குறிப்பாக உணர்த்தும் தன்மையை இவ்வாறு உரைப்பர்

அ) உவமை ஆ) உள்ளுறை

இ) உவமேயம் ஈ) உவமானம்

**10.** "பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே" என்பது

அ) தொல்காப்பியம் ஆ) அகத்தியம்

இ) நன்னூல் ஈ) புறநானூறு

**II.** **11** முதல் **14** வரை உள்ளவற்றைச் சரியாக பொருத்துக. **4 × 1 = 4**

**11.** எட்டாவது பிறவி - பாரதி தாசன்

**12.** பிசிராந்தையார் - திலகபாமா

**13.** அரேபியக் குதிரை - வைரமுத்து

**14.** வைகறை மேகங்கள் - ஆ.மாதவன்

**III.** **15** முதல் **18** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மூன்று கருத்துக்கள் அமையும்படி விடை எழுதுக. **4 × 3 = 12**

**15.** மணிமேகலை கூறும் எண்பேராயம் யார் யார்?

**16.** தொல்காப்பியம் கூறும் ெண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

**17.** கீழ்க்காணும் உவமைத்தொகையை உருவகமாக மாற்றுக.

அ) கொடி இடை ஆ) கயல் விழி இ) அன்ன நடை

**18.** உடன்படுமெய் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தருக.

**IV.** **19** முதல் **23** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு கருத்துக்கள் அமையும்படி விடை எழுதுக. **5 × 4 = 20**

**19.** ஒயிலாட்டம் பற்றி நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்தெழுதுக.

**20.** பக்திச்சுவை தமிழ் இலக்கியத்தின் தனிச்சுவை என்பதை இரண்டு எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

**21.** "போருழற் தொடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரல் என்பனபோல் மறித்துக்கை காட்ட" இப்பாடலில் அமைந்த அணியினை விளக்குக.

**22.** "புனலும் மணலும்" பாடப் பகுதியை மையமாக வைத்து இயற்கை அழகைப் பற்றி வர்ணனைக் குறிப்பு வரைக.

**23.** கீழ்க்காணும் சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு வரைக.

அ) வளர்பிறை   ஆ) வெற்றிலைபாக்கு

இ) மதிமுகம்   ஈ) செந்தமிழ்

**V.** **24, 25** வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஐந்து கருத்துக்கள் அமையும்படி விடை எழுதுக. **2 × 5 = 10**

**24.** வில்லுப்பாட்டு கலைஞர் ஒருவரை நேரில் பேட்டி காண்பதற்கான பத்து வினாக்கள் கொண்ட ஒரு வினா நிரல் தயாரிக்க.

**25.** இயற்கையைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக நடைபெறும் மாநாட்டு ஊர்வலத்தில் கொண்டு செல்வதற்கான ஐந்து முத்திரை வாக்கியங்கள் தயார் செய்க.

**VI.** **26** முதல் **28** வரையிலான வினாக்களுக்கு இரண்டு பக்கங்களுக்குக் குறையாமல் கட்டுரை வடிவில் விடை தருக. **3 × 8 = 24**

**26.** இந்திர விழாவின் போது காவிரிப்பூம்பட்டினம் அலங்கரிக்கப்பட்டிருந்த விதத்தைக் கட்டுரை வடிவில் எழுதுக.

**(அல்லது)**

காலம் தோறும் தமிழ் இலக்கியங்கள் அடைந்து வரும் மாற்றங்கள் குறித்து ஒரு திறனாய்வுக் கட்டுரை வரைக.

**27.** உனது பள்ளியின் சார்பாக நீவிர் சென்றுவந்த கல்விச் சுற்றுலா பற்றியும் கண்டுகளித்த இடங்களின் சிறப்புக்கள் பற்றியும் விவரித்து உனது நண்பனுக்கு கடிதம் ஒன்று எழுதுக.

**(அல்லது)**

"தமிழர் பண்பாடு" என்னும் தலைப்பில் கட்டுரை ஒன்று தயாரிக்க

**28.** உனக்குப் பிடித்த தமிழ் அறிஞர் ஒருவரின் வாழ்க்கை வரலாற்றினை கட்டுரை வடிவில் எழுதுக.

**(அல்லது)**

வரதட்சணைக் கொடுமையால் பெண்கள் நேரிடும் பிரச்சனைகளை வலியுறுத்தி பத்திரிக்கைக்கு தலையங்கம் ஒன்று எழுதுக.

Tamil — 808

July 2017

**FIRST YEAR HIGHER SECONDARY EXAMINATION, ~~MARCH~~ / ~~SEPTEMBER~~ 20.....**

| Qn. No. | Sub Qns | Answer Key / Value points | Score | Total |
|---|---|---|---|---|
| 1 | அ | புறநானூறு | 1 | 1 |
| 2 | ஈ. | சதுக்கபூதம் | 1 | 1 |
| 3 | இ | மணிமேகலை | 1 | 1 |
| 4 | ஈ. | இராமலிங்கம் | 1 | 1 |
| 5 | ஈ. | பம்மல் சம்பந்த முதலியார் | 1 | 1 |
| 6 | ஈ. | காரைக்கால் அம்மையார் | 1 | 1 |
| 7 | ஆ | பட்டினப்பாலை | 1 | 1 |
| 8 | இ | வீரமாமுனிவர் | 1 | 1 |
| 9 | ஆ | உள்ளுறை | 1 | 1 |
| 10 | இ | நன்னாள் | 1 | 1 |
| 11 | | எட்டாவது பிறவி — திலகபாமா | 1 | 1 |
| 12 | | பிசிராந்தையார் — பாரதிதாசன் | 1 | 1 |
| 13 | | அரேபியக் குதிரை — ஆ. மாதவன் | 1 | 1 |
| 14 | | வைகறை மேகங்கள் — வைரமுத்து | 1 | 1 |

| Qn. No. | Sub Qns | Answer Key / Value points | Score | Total |
|---|---|---|---|---|
| 15 | | கரணத்தியலவர், கருமவிதிகள், கனகச்சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர் தலைவர், நளிபடைத்தலைவர், யானைவீரர், இவுளிமறவர் | 3 | 3 |
| 16 | | நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை | 3 | 3 |
| 17 | அ | கொடியிடை - இடைக்கொடி | 1 | |
| | ஆ | கயல்விழி - விழிக்கயல் | 1 | 3 |
| | இ | அன்னநடை - நடையன்னம் | 1 | |
| 18 | * | உயிரெழுத்தை முதலாகவும் இறுதியாகவும் கொண்ட சொற்கள் | 1 | |
| | * | ய, வ | 1 | 3 |
| | * | பூ+அழகு=பூவழகு, மணி+அழகு=மணியழகு | 1 | |
| 19 | * | ஆண்கள் குழுவாக இணைந்து ஆடுதல் | 1 | |

FIRST YEAR HIGHER SECONDARY EXAMINATION, MARCH / SEPTEMBER 20 .....

| Qn. No. | Sub Qns | Answer Key / Value points | Score | Total |
|---|---|---|---|---|
| | * | தவில், சிங்கி போன்ற இசைக்கருவிகள் | 1 | |
| | * | நடைபெறும் இடங்கள் | 1 | 4 |
| | * | மொழிநடை | 1 | |
| 20. | * | சங்க காலப் பாடல்கள் | 1 | |
| | * | தற்காலப் பாடல்கள் | 1 | 4 |
| | * | மொழிநடை | 2 | |
| 21 | * | பாடலின் பொருள் | 1 | |
| | * | இலக்கண விளக்கம் | 1 | 4 |
| | * | அணி விளக்கம் | 2 | |
| 22 | * | இயற்கை அழகு | 1 | |
| | * | வர்ணனை | 2 | 4 |
| | * | மொழிநடை | 1 | |

FIRST YEAR HIGHER SECONDARY EXAMINATION, MARCH / SEPTEMBER 20 .....

| Qn. No. | Sub Qns | Answer Key / Value points | Score | Total |
|---|---|---|---|---|
| 23 | அ | வளர்பிறை - வினைத்தொகை | 1 | |
| | ஆ | வெற்றிலைபாக்கு - உம்மைத்தொகை | 1 | 4 |
| | இ | மதிமுகம் - உவமைத்தொகை | 1 | |
| | ஈ. | செந்தமிழ் - பண்புத்தொகை | 1 | |
| 24 | * | பொருத்தமான பத்து வினாக்கள் | 4 | 5 |
| | * | வினா அமைப்பு | 1 | |
| 25 | * | பத்து ~~முத்திரை~~ வாக்கியங்கள் | 4 | 5 |
| | * | மொழிநடை | 1 | |
| 26 | * | இந்திரவிழா | 2 | |
| | * | காவிரிப்பூம்பட்டினம் அலங்கரித்தல் | 2 | |
| | * | மொழிநடை | 2 | 8 |
| | * | தொகுப்புரை | 2 | |

FIRST YEAR HIGHER SECONDARY EXAMINATION, MARCH / SEPTEMBER 20 .....

| Qn. No. | Sub Qns | Answer Key / Value points | Score | Total |
|---|---|---|---|---|
| | | அல்லது | | |
| | * | தமிழ் இலக்கியங்களின் தோற்றம் | 2 | |
| | * | தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சி. | 2 | |
| | * | இலக்கியங்களின் மாற்றம் | 2 | 8 |
| | * | நவீன இலக்கியங்கள் | 2 | |
| 27 | * | கதை வடிவமைப்பு | 2 | |
| | * | கருத்துக்கோவை | 2 | |
| | * | மொழிநடை | 2 | 8 |
| | * | தொகுப்புரை | 2 | |
| | | அல்லது | | |
| | * | தமிழினம் | 2 | |
| | * | விருந்தோம்பல் | 2 | |
| | * | சமயப்பற்று | 2 | 8 |
| | * | தொகுப்புரை | 2 | |

5/6

| Qn. No. | Sub Qns | Answer Key / Value points | Score | Total |
| --- | --- | --- | --- | --- |
| 28 | * | தமிழ் அறிஞர் | 1 | |
| | * | வாழ்க்கைவரலாறு | 3 | 8 |
| | * | இலக்கியப்படைப்புகள் | 3 | |
| | * | மொழிநடை | 1 | |
| | | அல்லது | | |
| | * | பெண்களின் நிலை | 1 | |
| | * | பிரச்சனைகள் | 3 | |
| | * | பத்திரிக்கை செய்தி | 3 | 8 |
| | * | மொழிநடை | 1 | |